بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 27/09/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**அகழ்ப் போர் பற்றிய விபரத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

அகழ்ப் போரில் ஏற்பட்ட சூழ்நிலைகளைக் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் எடுத்துக் கூறியுள்ளார்கள் என்று கடந்த குத்பாவில் நான் கூறியிருந்தேன். **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** மதீனாவின் பெரும் பகுதி அகழ் மூலமாக பாதுகாக்கப்பட்டிருந்தது. இன்னொரு புறமோ சில மலைக் குன்றுகளும், சில உறுதியான வீடுகளும், சில தோட்டங்களும் இருந்தன. ஆகவே (காஃபிர்களின்) படை திடீரென்று தாக்குதல் நடத்த முடியாமல் இருந்தது. ஆகவே, மதீனாவில் எஞ்சிருக்கின்ற யூதர்களின் மூன்றாவது கோத்திரமான பனூ குறைஸாவை எவ்வகையிலாவது தம்முடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும், அதன் மூலமாக மதீனா வரை சென்றடைவதற்கான வழி திறக்கப்பட வேண்டும் என்றும் காஃபிர்கள் ஆலோசனை செய்து ஒரு தீர்மானத்திற்கு வந்தார்கள். பனூ குறைஸாவைத் தம்முடன் இணைப்பதற்கு முயற்சி செய்வதற்காக பனூ நஸீர் கோத்திரத்தின் தலைவனான ஹுயய் பின் அக்தப் -ஐ நியமித்தார்கள்.

ஆகவே ஹுயய் பின் அக்தப் பனூ குறைஸாவுடைய தலைவர்களை சந்திக்க சென்றபோது ஆரம்பத்தில் அவர்கள் சந்திக்க மறுத்து விட்டார்கள். ஆனால், ஹுயய் பின் அக்தப் பேராசையூட்டியபோது பனூ குறைஸா ஒப்பந்தத்தை முறிப்பதற்கு ஒப்புக்கொண்டார்கள். பனூ குறைஸா முஸ்லிம்களின் நட்புக் கோத்திரமாக இருந்தது. அவர்கள் வெளிப்படையாக முஸ்லிம்களுடன் சேர்ந்து கொண்டு போரில் கலந்து கொள்ளவில்லை என்றாலும், அவர்கள் இருக்கும் பக்கம் வழியாக மதீனாவின் மீது யாரும் தாக்குதல் நடத்த முடியாது என்று முஸ்லிம்கள் நம்பிக் கொண்டிருந்தனர். ஆகவே பனூ குறைஸா இருந்த பக்கம் முற்றிலும் பாதுகாப்பு இன்றி விடப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட நேரத்தில் பனூ குறைஸா எதிரிகளுடன் சேர்ந்து கொண்டதால் மதீனா மீது தாக்குதலுக்கான அபாயமும் அதிகரித்து விட்டது. எவ்வாறிருப்பினும், இவ்வாறான நிலையில் முஸ்லிம்களுக்குக் கவலை ஏற்படுவது இயல்பான விஷயமே! மேலும், அந்தக் கவலையை நீக்க முயற்சிக்க வேண்டியதும் அவசியமாக இருந்தது. ஆகவே, மதீனாவின் பாதுகாப்பிற்காக 500 நபர்களைக் கொண்ட படையை நியமிக்க வேண்டும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் தீர்மானித்தார்கள்.

பனூ குறைஸா உடன்படிக்கையை முறித்துக் கொண்ட செய்தி முஸ்லிம்களை வந்தடைந்த போது முஸ்லிம்களின் அச்சம் அதிகரித்து விட்டது. அவர்களுக்குத் தம் பெண்களைப் பற்றியும் பிள்ளைகளைப் பற்றியும் கவலை தோன்றியது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்தச் செய்தி கிடைத்த போது அன்னார் ஹஸ்ரத் சல்மா பின் அஸ்லம் (ரலி) அவர்களுக்கு 200 படை வீரர்களையும், ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களுக்கு 300 படை வீரர்களையும் கொடுத்து மதீனாவைப் பாதுகாப்பதற்காக அனுப்பி வைத்தார்கள். இரவு நேரங்களில் அவர்கள் பல்வேறு இடங்களில் காவல் பணியில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்றும், அவ்வப்போது அல்லாஹு அக்பர் என்று தக்பீர் முழக்கங்களிட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அவர்களுக்குக் கூறியிருந்தார்கள்.

**ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இதை இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்:** இந்த சூழ்நிலையால் பலவீனமான முஸ்லிம்களிடத்தில் கடும் கவலையும், பதற்றமும் ஏற்பட்டுவிட்டது. அறிவுடைய எவருக்கும் இதன் உண்மைத்துவம் மறைவாக இருக்கவில்லை. சில முனாஃபிக்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நகரில் எங்களது வீடுகள் முற்றிலும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளன. ஆகவே, தாங்கள் அனுமதி வழங்கினால் நாங்கள் எங்கள் வீடுகளில் தங்கி அவற்றைப் பாதுகாப்போம் என்று கூறினர். இதற்கு பதிலளிக்கும் வகையில் இறை வஹீ இறங்கியது;

وَمَا هِيَ بِعَوْرَةٍ ۚ إِنْ يُرِيدُونَ إِلَّا فِرَارًا ۝

அதாவது, ‘தம் வீடுகள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள் என்பது தவறாகும். மாறாக விஷயம் என்னவென்றால், அவர்கள் போர்க்களத்தை விட்டு தப்பியோட வழிவகை தேடுகின்றனர்.’

ஆகவே, இவ்வாறான அபாயகரமான நேரத்தில் முஸ்லிம்களின் சிறிய ஜமாஅத், அதுவும் எப்படிப்பட்டதாக இருந்தது என்றால், அவர்களில் சிலர் பலவீனமான இயல்பை உடையவர்களாக இருந்தார்கள்; சிலர் முனாஃபிக்களாகவும் இருந்தார்கள். அவர்களால் இந்தப் பெரும்படையை எவ்வாறு எதிர்கொள்ள முடியும்? சில சமயம் சூழ்நிலை மிகவும் இக்கட்டானதாக மாறிவிடும். ஏதேனும் பலவீனமான பகுதியிலிருந்து பயன் அடைந்தவாறு காஃபிர்களின் படை நகர் எல்லைக்குள் நுழைந்து விடும் அளவுக்குச் சென்று விடும். அவ்வாறான தாக்குதலை எதிர்கொள்வதற்காக முஸ்லிம்கள் பொதுவாக அம்புகளை எறிந்து தடுப்பார்கள். அவை முஸ்லிம்களுக்கு மிகவும் துன்பமான, சிரமமான, அபாயகரமான நாட்களாக இருந்தன.

பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த சூழலைக் கண்டபோது அன்ஸார் (மக்களி)ன் தலைவர்களான ஹஸ்ரத் சஅது பின் முஆஸ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் சஅது பின் உபாதா (ரலி) ஆகியோரை அழைத்து, நீங்கள் விரும்பினால் ஃகத்ஃபான் கோத்திரத்திடம் மதீனாவின் வருவாயிலிருந்து உங்களுக்குக் கொஞ்சம் தருகிறோம் என்று கூறி போரைத் தள்ளிப் போட்டு விடலாம் என்று கூறினார்கள். அதற்கு அவ்விருவரும் ஒரே குரலில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் ஷிர்க்கின் நிலையில்கூட எந்தவோர் எதிரிக்கும் எதையும் கொடுத்தது கிடையாது. அவ்வாறிருக்கும் போது இப்பொழுது முஸ்லிம்களாக இருக்கும் நிலையில் ஏன் கொடுக்க வேண்டும்? அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாம் அவர்களுக்கு வாள் வீச்சைத் வேறு ஒன்றும் கொடுக்க மாட்டோம் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்)

அவர்களுக்கு அன்ஸார் மக்களின் காரணமாகவே கவலை இருந்தது. அவர்கள் மதீனாவின் உண்மையான குடிமக்களாக இருந்தார்கள். இந்த சோதனைகளைக் கண்டு அன்ஸார் கவலையில் ஆழ்ந்து விட்டார்களா என்று அன்ஸாருடைய மனநிலையை அறிந்து கொள்ளும் நோக்கத்தில் அநேகமாக இந்த ஆலோசனையைப் பெருமானார் (ஸல்) அவர்கள் கேட்டிருக்கலாம். அவர்கள் கவலையில் இருக்கிறார்கள் என்றால் அவர்களை ஊக்குவிக்கலாம் என்று அன்னார் விரும்பி இருக்கலாம். ஆகவே இப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் முழு மகிழ்ச்சியுடன் அவர்களின் இந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்டார்கள். (இவ்வாறு) போர் மேலும் தொடர்ந்தது.

குழப்பமான இந்த சூழ்நிலையில் பல்வேறு இடங்களில் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அவற்றில் பெருமானார் (ஸல்) அவர்களும் பங்கெடுத்து வந்தார்கள். மதீனாவின் அந்த இரவுகள் கடும் குளிரான இரவுகளாக இருந்தன. இதைத்தவிர பசியின் கஷ்டங்களும் இருந்தன. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருநாள் பெருமானார் (ஸல்) அவர்கள் எந்தஅளவு களைப்படைந்து போயிருந்தார்கள் என்றால், யாராவது ஒரு நல்லடியார் கண்காணிக்கும் பணியை மேற்கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று கூறினார்கள். அன்னார் இதைக் கூறிக் கொண்டிருக்கும் போது ஆயுதங்களின் ஓசையைக் கேட்டார்கள். யார் வந்துள்ளார்கள் என்று வினவினார்கள். அப்போது ஹஸ்ரத் சஅது பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் சஅது ஆவேன்; தங்களின் பாதுகாப்பிற்காக வந்துள்ளேன் என்று கூறினார்கள். நீங்கள் இன்ன பகுதிக்கு செல்லுங்கள்; அங்கு அகழின் ஒரு பகுதி பலவீனமாக உள்ளது. அங்கு காவல் பணியை மேற்கொள்ளுங்கள் என்று அன்னார் கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் உயிர்த் தியாகிகளாக இருந்த சஹாபிகளும் அன்னாரை நேசிக்கக் கூடிய விதம் வினோதமாக இருந்தது. சஹாபிகளும் இவ்வாறு தம்மை ஒப்படைத்துக் கொண்டே சென்றார்கள். இன்னொரு புறம், பெருமானார் (ஸல்) அவர்களோ தம்மை விட சஹாபிகளுக்கு முன்னுரிமை வழங்கிக் கொண்டே சென்றார்கள். எந்த அளவுக்குத் துணிவைக் காட்டினார்கள் என்றால், தம் உயிரைப் பற்றி கொஞ்சம் கூட அக்கறை கொள்ளவில்லை; மதீனாவாசிகளைப் பற்றிய அக்கறை (மட்டுமே) இருந்தது. அதற்காக தாமே எல்லா இடங்களிலும் சென்று கண்காணிப்பு பணியை மேற்கொள்வார்கள். வெளிப்படையில், அவ்வப்போது ஓய்வெடுப்பதற்காக கூடாரத்திற்கு வருவார்கள்தான்! ஆனால் அந்த ஓய்வின் பெரும்பாலான நேரத்தை இறைவனுக்கு முன்னால் ஸஜ்தா செய்தவாறு துஆக்களில் கழித்து வந்தார்கள்.

**இந்தப் போரின் போது ஹஸ்ரத் சஃபியா (ரலி) அவர்களின் வீரச் செயல் குறித்த சம்பவமும் காணக் கிடைக்கிறது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இதைப் பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு எழுதுகிறார்கள்:** பெண்கள் மற்றும் குழந்தைகள் நகரின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் தங்க வைக்கப்பட்டிருந்தார்கள். அது ஓரளவுக்கு கோட்டையைப் போன்று இருந்தது. ஆனால் இவர்களைப் பாதுகாப்பதற்காக போர்க்களத்திற்குச் செல்லத் தகுதியற்றிருந்த ஆண்கள் நியமிக்கப்பட்டு வந்தார்கள். யூதர்கள் உளவறிந்து வருவதற்காக தம் சார்பாக ஒருவனை அந்தப் பகுதிக்கு அனுப்பி வைத்தார்கள். அப்போது தற்செயலாக பெண்கள் பகுதியில் ஹஸ்ரத் ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) எனும் ஒரே ஒரு சஹாபி மட்டுமே எஞ்சி இருந்தார். அந்த யூத எதிரி சந்தேகத்திற்குரிய வகையில் தங்களது குடியிருப்பை சுற்றி வருவதைப் பெண்கள் பார்த்தபோது பெருமானார் (ஸல்) அவர்களின் மாமியான ஹஸ்ரத் சஃபியா (ரலி) பின்த் அப்தில் முத்தலிப் அவர்கள்

ஹஸ்ஸான் அவர்களிடம், இந்த நபர் யூத எதிரியாவான். உளவறிந்து வருவதற்காகவும், விஷமம் செய்வதற்காகவும் இங்கு சுற்றிக் கொண்டிருக்கிறான். அவனைக் கொன்று விடுங்கள் என்று கூறினார்கள். ஆனால் ஹஸ்ரத் ஹஸ்ஸான் (ரலி) அவர்களுக்கு அதற்கான தைரியம் இருக்கவில்லை. ஆகவே ஹஸ்ரத் சஃபியா (ரலி) அவர்கள் தாமே முன்னால் சென்று அந்த யூதனை எதிர்கொண்டார்கள். அவனை அடித்து வீழ்த்தினார்கள். பிறகு அவனுடைய தலையை வெட்டி யூதர்கள் இருந்த திசையை நோக்கி எறிந்தார்கள். அதன் காரணமாக யூதர்களுக்கு முஸ்லிம் பெண்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு தைரியம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவும், முஸ்லிம் பெண்களின் பாதுகாப்பிற்காக இந்த இடத்தில் போதுமான ஆண்கள் இருக்கிறார்கள் என்று அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும் அவ்வாறு செய்யப்பட்டது. எனவே, இந்த திட்டம் பலித்தது. யூதர்கள் அச்சமடைந்து திரும்பிச் சென்று விட்டார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் இச்சம்பவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:** ஆராய்ந்து பார்த்த போது, அவன் யூதன் என்றும் பனூ குறைஸாவுடைய உளவாளி என்றும் தெரிய வந்தது. இதனால் முஸ்லிம்கள் மேலும் பயந்து போனார்கள்; மதீனாவின் இப்பகுதியும் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக கருதினார்கள். மதீனாவின் முன் புறம் எதிரியின் தாக்குதல் எந்த அளவு ஆக்ரோஷமாக இருந்தது என்றால் முஸ்லிம்கள், பெண்கள் இருந்த இப்பகுதியைப் பாதுகாப்பதற்கு எவ்வித ஏற்பாடும் செய்ய முடியாமல் இருந்தார்கள். ஆனால் அவ்வாறிருந்தும் பெருமானார் (ஸல்) அவர்கள் பெண்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கியவாறு 1200 படைவீரர்களில் இருந்து 500 படை வீரர்களைப் பெண்களின் பாதுகாப்பிற்காக நகருக்குள் நியமித்தார்கள். (இப்போது) அகழுடைய பாதுகாப்பிற்காகவும், 18,000, 20,000 எண்ணிக்கையில் இருந்த எதிரியை எதிர்கொள்வதற்காகவும் 700 படைவீரர்கள் மட்டுமே எஞ்சி இருந்தார்கள்.

**ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அம்ர் பின் அப்தே உத் என்பவனைக் கொன்ற சம்பவமும் காணக் கிடைக்கிறது.** அம்ர் பின் அப்தே உத் எப்படிப்பட்ட வீரனாக இருந்தான் என்றால் அரபு நாட்டில் ஓராயிரம் வீரர்களுக்கு சமமானவனாகக் கருதப்பட்டான். இவன் தன் இரு தோழர்களுடன் அகழைத் தாண்டி வந்திருந்தான். மிகவும் ஆணவமான தொனியில், சொர்க்கத்தை விரும்பக் கூடியவர்களே! இங்கே வாருங்கள். நான் உங்களை சொர்க்கத்திற்கு அனுப்பி வைக்கிறேன்; அல்லது நீங்கள் என்னை நரகத்திற்கு அனுப்பி வையுங்கள் என்று கூறினான். அவன் இரண்டாம் முறையோ அல்லது மூன்றாம் முறையோ குரல் கொடுத்த போது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் தம்முடைய தலைப்பாகையை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் தலையில் வைத்தார்கள். தம்முடைய வாளையும் கொடுத்தார்கள். துஆ செய்தவாறு அவர்களை சண்டைக்கு அனுப்பி வைத்தார்கள். அவனும் சண்டைக்கு வந்தான். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனைக் கொன்று விட்டார்கள்.

அவன் கொல்லப்பட்ட பிறகு அவனுடைய தோழர்கள் ஓடி விட்டார்கள். அவனுடன் வந்திருந்த ஸிரார் பின் கத்தாப் என்பவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சகோதரர் ஆவார். அவர் தப்பி ஓடிய போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அவரை விரட்டிச் சென்றார்கள். ஸிரார் திடீரென்று திரும்பி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீது ஈட்டியைக் கொண்டு தாக்குதல் நடத்தவிருந்தார். ஆனால் அவ்வாறு தாக்குதல் நடத்தாமல் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பார்த்து, உமரே! நான் உங்கள் மீது

செய்த இந்த உபகாரத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! நான் உங்கள் மீது தாக்குதல் நடத்தவில்லை என்று கூறினார். ஸிரார் அப்படி என்னதான் உபகாரம் செய்து விட்டார்! ஆனால் உண்மை என்னவென்றால், அல்லாஹ் ஸிராரின் மீது அருள் புரிந்தான். மக்கா வெற்றியின் போது அதே ஸிரார் பின் கத்தாப் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். பிறகு, அவர் இஸ்லாமிய போர்களில் முழுமையாக பங்கெடுத்து நன்கு வீரத்துடன் போரிட்டார். யமாமா போரில் ஷஹீத் ஆனார். சிலரைப் பொறுத்தவரை அவர் ஷஹீதாகவில்லை என்றும் நீண்ட காலம் வரை உயிர் வாழ்ந்தார் என்றும், இஸ்லாத்திலேயே வஃபாத் ஆனார் என்றும் கூறப்படுகின்றது.

அம்ர் பின் அப்தே உத் கொல்லப்பட்ட பிறகு காஃபிர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் தூதுச் செய்தி அனுப்பி, அவனுடைய உடலைப் பத்தாயிரம் திர்ஹம்களுக்கு வாங்கிக் கொள்வதாக கூறினார்கள். சில அறிவிப்புகளில் நவ்ஃபல் பின் அப்துல்லாஹ் உடைய பெயர் வருகிறது. பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில், தாங்கள் இந்த சடலத்தைத் திருப்பி கொடுத்துவிடுங்கள். நாங்கள் பத்தாயிரம் திர்ஹம் தங்களுக்குத் தருவதற்கு ஆயத்தமாக உள்ளோம் என்று செய்தி அனுப்பினார்கள். நாம் முஸ்லிம் தலைவர்களின் சடலங்களை சிதைப்பது போன்று, இன்னும் கூறுவதென்றால் பெருமானார் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரருடைய மூக்கையும், காதுகளையும் உஹுது போரின் போது நாம் வெட்டியது போன்று ஒருவேளை இன்று முஸ்லிம்கள் நம்முடைய இந்தத் தலைவரின் மூக்கையும், காதுகளையும் வெட்டி நம் சமுதாயத்தை இழிவுபடுத்தி விடுவார்களோ என்று காஃபிர்கள் நினைத்துக் கொண்டார்கள். ஆனால் இஸ்லாமிய கட்டளையோ முற்றிலும் வேறொன்றாக இருந்தது. சடலங்களை அவமதிப்பதற்கு இஸ்லாம் அனுமதி கொடுப்பதில்லை. காஃபிர்களின் தூதுச் செய்தி பெருமானார் (ஸல்) அவர்களை வந்தடைந்தபோது, இந்த சடலத்தை நாம் என்ன செய்யப் போகிறோம்? இந்த சடலம் நமக்கு எவ்வகையில் பயன்படப் போகிறது? இதற்கு பதிலாக நாங்கள் உங்களிடமிருந்து எந்த விலையையும் கேட்க மாட்டோம். உங்களுடைய சடலத்தை நீங்கள் கொண்டு செல்லுங்கள். எங்களுக்கு அதனுடன் எந்தத் தொடர்பும் கிடையாது என்று கூறி விட்டார்கள்.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கிளை அமைப்புகளின் இஜ்திமா தொடர்பாக கூறும்போது அறிவுரை வழங்கியவாறு கூறினார்கள்:* இந்நாட்களில் குறிப்பாக துஆக்களில் அதிக நேரத்தை செலவிடுங்கள்; துரூது ஓதுவதின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! இஜ்திமாவின் நோக்கத்தை முழுமையாக்குவதற்கு முயற்சி செய்யுங்கள். அதுவன்றி, கேளிக்கை நிகழ்ச்சிகளிலும் பேச்சுகளிலும் நேரத்தைக் கழிக்காதீர்கள். அல்லாஹ் எல்லா வகையிலும் இதை அருளுக்குரியதாக ஆக்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)